விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 228 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 19 வெள்ளிக்கிழமை (04.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## கிளாலி கடற்கரையில் கடற்படை துப்பாக்கிச் சூடு
### இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கடற்கரையில் சட்டவிரோத மணல் ஏற்றிய நபர்கள் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பளை பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் பிரணவன் என்பவரே காய 15


## கீரிமலை புனித தீர்த்தக்கேணி தொல்லியல் சின்னமாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை புனித தீர்த்தக் கேணி தொல்லியல் சின்னமாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐந்து ஈச்சரங்களில் ஒன்றான நகுலேஸ்வர ஆலயம் அருகே தமி 15



# 13ஐ அமுலாக்குவது பாரதூரமானது

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நாட்டில் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படலாம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் பகிர்ந்தளித்தால் நெருக்கடிகள் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## மின்கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

மின்சாரக்கட்டணம் குறைக்கப்பட்டு சில வாரங்களேயாகும் நிலை 15

## யாழ்.பல்கலை மாணவி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அமிர்தநாயகம் 15

## 500 போதை மாத்திரைகளுடன் பண்ணையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப் பகுதியில் 500 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தலைமையிலான யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலில் குறித்த கைது இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்தில் குறித்த சந்தேக நபரை சுற்றிவளைத்தபோது அவரிடமிருந்து 500 போதை மாத்திரை கிடைக்கப் பெற்றதாக பொலி 15


### கடும் வெயில் காரணமாக
## மல்லாவியில் கொத்துக் கொத்தாக செத்து மிதக்கும் மீன்கள்

(மல்லாவி)

மல்லாவி குளத்தில் விவசாயத்துக்கு நீர் விநியோகிக்கும் கால்வாயில் இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து மிதக்கின்றன.

தற்போது நிலவுகின்ற கடுமையான வெயில் காரணமாக குறித்த குளத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ள நிலையில் மீன் இறந்திருக்கலாம் என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீன் குஞ்சுகள் சில மாதங்களுக்கு 15



### நீர்க் கட்டண உயர்வால்
## உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம்?

(கொழும்பு)

நீர்க்கட்டண உயர்வால் உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலையை ஓரளவுக்கு உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

அத்துடன் உணவக வளாகத்தில் தற்போதுள்ள மலசலக்கூட வசதிகளும் தடை செய்யப்பட 15

## அதிகளவான உயிர்க்கொல்லி ஹெரோயின் பாவனை
### யாழில் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

அதிகளவான உயிர்க்கொல்லிஹெரோயின்பாவனை காரணமாக யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த லாபீர் றைகூஸ் சமன் என்ற 27 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும்தெரியவருகை 15

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் - நாகபட்டினம் இடையே எண்ணெய்க் குழாய் கட்டமைப்பு

## பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான எண்ணெய்க் குழாய் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கான தொழில்நுட்ப பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தயாராவதாக இந்திய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

தொழில்நுட்ப பேச்சுவார்த்தை ஊடாக இரு நாடுகளுக்கிடைய ஸ்தாபிக்கப்படவுள்ள எண்ணெய்க் குழாய் கட்டமைப்பின் பௌதீக திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யோசனை திட்டத்திற்கமைய, தமிழகத்தின் நாகப்பட்டினம் முதல், இலங்கையின் யாழ்ப்பாணம் வரையில் குறித்த குழாய் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கு தயாராவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட சந்தர்ப்பத்தில், எரிசக்தியை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமையவே இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பெட்ரோலிய சந்தை சீனாவின் Sinopec மற்றும் அமெரிக்காவின் RM Parks நிறுவனங்களுக்காக திறந்து விடப்பட்டுள்ள நிலையில், அவுஸ்திரேலியாவின் United Petroleum நிறுவனமும் இந்த சந்தைக்குள் பிரவேசிக்கவுள்ளது.

LNG-யிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயல்முறைக்காக ஏற்கனவே அமெரிக்காவின் New Fortress நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதுடன், மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது. (ம-7)

# தமிழர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் பெறுவது தவறு

## மனோகணேசன்

யுத்த அச்சம் காரணமாக வடபுலத்திலுள்ள இளைஞர்கள் நாட்டிலிருந்து சென்று வெளிநாடுகளில் தஞ்சம் பெறுவது முற்றிலும் தவறு என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடபுலத்திலுள்ள இளைஞர்களின் எதிர்பார்ப்பு தொடர்பில் வழங்கிய செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், உலக நாடுகளை உலுக்கிய போராட்டங்களில் தமிழ் மக்களின் போக்கு தற்போது மாறியுள்ளதாகவும் கூறியுள்ளார். (ம-7)

# கனேடிய பிரதமரின் 18 வருட திருமண வாழ்க்கை நிறைவு



கனேடிய நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது மனைவி சோஃபி இருவரும் பிரிந்து வாழ முடிவெடுத்து இருப்பதாக புதன்கிழமை அறிவித்துள்ளனர்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது மனைவி சோஃபி கிரெகோயர் இருவரும் கடந்த 2005ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர்.

இவர்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் என மூன்று குழந்தைகள் உள்ளனர். கிட்டத்தட்ட இருவருக்கும் திருமணம் ஆகி 18 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், தற்போது பிரிந்து வாழ முடிவெடுத்து இருப்பதாக இருவரும் தங்களது இன் ஸ்டாகிராம் பக்கத்தில் அதிகாரப் பூர்வமாக தெரிவித்துள்ளனர். (ம-7)

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டுடன் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை றோட் புத்தூர் சந்தியில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரம்
- குடியிருப்பு சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

(16410)

**076 788 0591**

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 21 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- புதிய செம்மணி வீதி
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

(16410)

**076 788 0591**

# மணிவிழா வாழ்த்து

## திருமதி வசந்தி தெய்வேந்திரகுமாரன்



### மதகுருவின் வாழ்த்துச் செய்தி

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய திருமதி. வசந்தி தெய்வேந்திரகுமாரன் அவர்கள் நீண்டகாலமாக எமது கல்லூரியில் சேவையாற்றி சைவசமய பாடத்தை மாணவர்களுக்கு நல்லமுறையில் போதித்து சைவ சமய முறைப்படி மாணவர்களை பாடசாலைக்கு வரவழைத்த பெருமை இவரையே சாரும். இவரது ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அவர்தம் குடும்பத்தினருடன் நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிர சுவாமியை வேண்டி நிற்கின்றேன்.

பிரதம குரு,
க.சிவதாசக் குருக்கள்.

### ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் வாழ்த்துச் செய்தி

எமது கொக்குவில் இந்துக் கல்லூரியில் 09.03.2011 தொடக்கம் எங்கள் ஆசிரியர் குழாத்துடன் திருமதி. வசந்தி தெய்வேந்திரகுமாரன் இணைந்து எம் மாணவர்களுக்கு சைவசமயத்தை மிகத்திறம்படக் கற்பித்து வந்தார். மாணவர் நலனில் அக்கறை கொண்டவராகவும், தனது ஓய்வு நேரத்தைகூட தனது வகுப்பு மாணவர்களுடனேயே செலவிட்டு வந்துள்ளார் .

இதே போன்று ஆசிரியர்களுடனும் மிக நெருக்கமாகப் பழகி வந்ததுடன் அவர்களின் சுக துக்கங்களில் பங்கேற்பதிலும் முன்னின்றவர் ஆவார். தனது மனதில் எது சரி என்று தோன்றுகிறதோ அதனை நேரடியாகவே சுட்டிக்காட்டும் பண்புடையவர்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக" என்னும் வாக்கிற்கு இணங்க கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்து சமயத்தை வளர்த்த பெருமைக்குரியவர் இவர் ஆற்றிய சேவையினால் கொக்குவில் இந்து மாணவர்கள் இந்து சமய நற்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வதைக் காணமுடிகின்றது.

முப்பது வருடங்களாக சைவசமய ஆசிரியராக கடைமையாற்றி 03.08.2023 உடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஆசிரியரின் ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டி வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



**திருமதி வசந்தி தெய்வேந்திரகுமாரன்**
**(B.A.DIPLOMA IN EDU)**

1. தி/பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்
   கந்தளாய் 11.01.1993 - 20.08.1998
2. தி/கலைமகள் மகா வித்தியாலயம்
   அன்பு வழிபுரம் திருகோணமலை
   21.08.1998 - 31.12.2010
3. தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
   திருகோணமலை 01.01.2011 - 08.03.2011
4. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
   09.03.2011 - இன்று வரை

### அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருமதி. வசந்தி தெய்வேந்திரகுமாரன் ஆசிரியர் அவர்கள் 09.03.2011 முதல் இன்று வரை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றி வந்துள்ளார். தனது கற்பித்தல் காலத்தில் மாணவச் செல்வங்களுக்கு இந்து சமய பாடத்தை அர்ப்பணிப்புடனும் சிறப்பாகவும் கற்பித்து வந்துள்ளார்.

அகவை அறுபதைப் பூர்த்தி செய்து இன்று முதல் ஓய்வுபெறும் தங்களது ஓய்வுகாலம் நலமாக அமைய வாழ்த்துகின்றேன். தன்னலம் கருதாது ஆசிரிய சேவையிலும், இணைபாடவிதான செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்ப்பித்த ஆசிரியருமாவார்.

தன்னலங் கருதாது ஆற்றிய பணியில் தங்களது ஓய்வு காலத்தை குடும்பத்துடன் மனநிறைவோடும் மகிழ்வோடும் களித்தின்புற வாழ்த்துகிறேன். உங்களால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பரந்து விரிந்து வாழ்கின்றனர். இதனைக் கண்டு தங்கள் உள்ளம் அகமகிழ்வதுடன், தங்கள் சேவையால் கல்லூரி பெருமை கொள்கின்றது.

கடந்த பதின்மூன்று வருடகாலமாக கொக்குவில் இந்து அன்னையுடன் எந்தவித பிரதிபலனும் கருதாது, தன்னலம் பார்க்காது மாணவச் செல்வங்களின் மனங்களிலே கண்டிப்பும், கருணையம் மிக்க ஒரு ஆசானாகக் கொலு வீற்றிருந்தமையானது தமது கல்விப் பணியிலே மிகத்திருப்தியான, நிறைவான சேவையினைச் செய்தமைக்கான சான்றாகக் காணப்படுகின்றது.

கல்லூரியுடன் பயணிக்கும் தருணங்களில் நிர்வாக ரீதியான, இணைபாட விதானக் கருமங்களில் தங்களின் பங்களிப்பினையும், பங்குபற்றுதலையும் மீண்டும் ஒருமுறை நன்றியுடன் நினைவுகூருகின்றேன். எமது ஆசிரியர் குழாத்திலே மிகச்சிறந்த முன்மாதிரியான ஆசானாகத் தாங்கள் ஆற்றிய பணியினை மெச்சுவதுடன் இதற்கெல்லாம் மூல ஆதாரமாகவிருந்த தங்களது குடும்பத்தினரது பங்களிப்பினையும் பாராட்டி மகிழ்கின்றேன். தங்களது பணி ஓய்வு காலம் பூரண நலத்துடனும் குடும்பத்தினருடனும் பயணிக்க எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய பெருமானின் நல்லாசிகளையும் யோகர் சுவாமிகளின் குருவருளினையும் ஆசித்து நிறைவு செய்கின்றேன்.

ம.ஞானசம்பந்தன்,
அதிபர்,
(C-7002) யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரப் பகிர்வின் பின்விளைவுகள்
# ஆபத்தானதாக இருக்கும்-அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ளது போன்று ஒவ்வொரு மாகாணங்களுக்கும் பொலிஸ் அதிகாரத்தை பகிரும் போது அதனால் ஏற்படும் பின்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்.**



இந்த விடயத்தில் தெற்கு மக்கள் உள்ளிட்ட சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

அதற்காக, இந்த விவகாரத்தில் வடக்கு மக்களுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனவே, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பகிரங்க விவாதத்தை முன்னெடுத்து சகலரும் கூட்டாக ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும்.

பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலுள்ள ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றால் எமது நாட்டு மக்கள் சகலரும் ஒன்றுபட வேண்டும். அவ்வாறெனில் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் தேசிய, இன, மத பேதமின்றியும் பாகுபாடு இன்றியும் பொதுவாக நாட்டுக்கு ஏற்புடைய முறையொன்றை எவ்வாறு உருவாக்கிக் கொள்வது என்பதே தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினையாகும்.

இதன்போது சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தெற்கு மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நீதியான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவே நாங்கள் முயற்சிக்கிறோம்.

பொலிஸ் அதிகாரம் தொடர்பில், தமிழ் மக்களுடன் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இருந்தபோதும் பொலிஸார் தற்போது அரசியல் மயமாகியுள்ளதாக மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான அமைச்சரொருவரையும் ஒரு நிர்வாகத்தின் கீழாக பொலிஸ் சேவை இருக்கும் போதே இந்த நிலைமை என்றால் ஒன்பது மாகாணங்களுக்கு ஒன்பது பொலிஸ் பிரிவுகள் உருவாகி 9 முதலமைச்சர்களின் கீழ் பொலிஸ் நிர்வகிக்கப்படும் போது என்ன நடக்கும் என்பது தொடர்பில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# உள்நாட்டு எரிவாயு
## சிலிண்டர்களின்விலை அதிகரிப்பு
## லிட்ரோ காஸ் நிறுவனம்



(கொழும்பு)

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவின் விலை 85 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். அதன்படி இந்த விலை உயர்வு உள்ளூர் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களுக்கான புதிய விலை இன்று அறிவிக் கப்படும் எனவும் எரிவாயு விலை சூத்திரத்தின் அடிப்படையில் மாதந்தோறும் திருத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நீர்க் கட்டணங்களில் மாற்றம்

(கொழும்பு)

நீர்க் கட்டணங்கள் 30% முதல் 50% வரை அதிகரிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## மீண்டும் அதிகரிக்கும் எரிபொருள் ஒதுக்கீடு

(கொழும்பு)

வாகனங்களுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் இம்மாதம் மீண்டும் அதிகரிக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கியூ.ஆர் குறியீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்படும் எரிபொருள் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் புதிதாக செயற்பட ஆரம்பித்துள்ள எரிபொருள் விநியோக நிறுவனங்கள் இந்த ஒதுக்கீடு நடைமுறைக்குள் வருவதற்குத் தயக்கம்காட்டுவது மேற்படி தாமதத்துக்கு காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# அரசின் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படும்
## சஜித் எச்சரிக்கை

(கொழும்பு)

"அரசு எப்போதும் மக்களுக்குச் சார்பான செயற்பாடுகளையேயன்றி மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளையே செய்து வருகின்றது. அதன் விளைவுகள் அரசுக்குப் பேரிடியாக முடியும் நாள் வெகு தொலைவில் இல்லை" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குளிரூட்டி அறைகளில் இருந்து அரசு எடுக்கும் தன்னிச்சையான முடிவுகளால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது போகும்.

உரத் தடைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தன்னிச்சையான முடிவுகளை அரசு நினைவுகூர வேண்டும்.

நாடு மிக மோசமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், நாடு முழுவதும் சோறு போடும் விவசாயிகளின் வாழ்வோடு விளையாடுவதால் ஏற்படும் விளைவுகளை அரசு மட்டுமல்லாது நாடு முழுதும் அனுபவிக்க நேரிடும்.

இது நாட்டின் விவசாயத்தை முடக்குவதற்கு எடுக்கும் அரசின் நுட்பமான மற்றும் தந்திரமான முயற்சியா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

## தாயின் மீதான கோபத்தில் உயிரை மாய்த்த மாணவன்

(கொழும்பு)

கொழும்பு, தெமட்டகொட பிரதேசத்தில் தாயுடன் ஏற்பட்ட கோபத்தில் 13 வயது மாணவன் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

விளையாடிக் கொண்டிருக்கும் போது, மாணவனை மேலதிக வகுப்பிற்கு செல்ல தயாராகுமாறு தாய் கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த மாணவன் அறைக்குள் சென்று விபரீத முடிவை எடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெமட்டகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)



# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக பசில்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராக களமிறக்கும் எண்ணம் எமக்கு இல்லை எனவும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பொது வேட்பாளராக களமிறக்கப்படலாம் எனவும் ஆளும்தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பொதுஜன பெரமுனவில் தகுதியான ஒருவரை பொது வேட்பாளராக களமிறக்குவோம். அதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

பொதுஜன பெரமுனவை உருவாக்கியவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ அவரின் தலைமையிலேயே கட்சி இயங்கிவருகிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பசில் ராஜபக்ஷ பொது வேட்பாளராக களமிறக்கப்படலாம் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிண்ண தொடரிலிருந்து விலகும் ராகுல், ஸ்ரேயாஸ் அய்யர்



இந்திய அணியின் முன்னணி பட்ஸ்மேன்களில் ஒருவர் கே.எல்.ராகுல். ஐ.பி.எல் போட்டியின் போது அவருக்கு காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இதன் காரணமாக ராகுல் தற்போது நடைபெற்று வரும் வெஸ்ட் இண்டீஸ் தொடரில் விளையாடவில்லை. கே.எல். ராகுல் பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் தற்போது பயிற்சி பெற்று வருகிறார். அவரது உடல் தகுதியை அங்குள்ள குழு பரிசோதித்து வருகிறது.

இந்நிலையில் ஆசிய கிண்ணப்போட்டியிலும்ராகுல் விளையாடமாட்டார் என்று தகவல் வெளியாகி உள்ளது. காயத்தில் இருந்து அவர் இன்னும் முழுமையாக குணம் அடையவில்லை. காயத்தில் இருந்து மீண்டு வருவதற்கு அவருக்கும் இன்னும் அதிகமான நேரம்தேவைப்படுகிறது. இதேபோல ஸ்ரேயாஸ் அய்யரும் அணிக்கு உடனடியாக திரும்ப இயலாது.

முதுகு பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்காக அவர் சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அவரும் தேசிய கிரிக்கெட் அகாடமியின் கண்காணிப்பில் உள்ளார். இருவரையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் மருத்துவ குழு தொடர்ந்து பரிசோதித்து வருகிறது. உலக கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறும். இந்தப் போட்டியில் ராகுல், ஸ்ரேயாஸ் அய்யர் விளையாடுவது முக்கியமானது.

இதனால் இருவரையும் அவசரமாக விளையாட வைக்க கிரிக்கெட் வாரியம் விரும்பவில்லை. உலக கிண்ண போட்டிக்கு முன்பு இந்திய அணி அவுஸ்திரேலியாவுடன் 3 ஒரு நாள் போட்டியில் விளையாடுகிறது. இந்த தொடரில் இருவரும் விளையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய கிண்ண கிரிக்கெட் (50 ஓவர்) போட்டி ஓகஸ்ட் 30 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 17 ஆம் திகதி வரை இலங்கை, பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. (4)




கல்வி அமைச்சு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய ரெனிஸ் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரியை ஒற்றையர் பிரிவில் 6:1, 6:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 20 வயது ஆண்கள் பிரிவில் சம்பியன் ஆனது.

# 27 ஆண்டுகால சாதனையை முறியடித்த உனத்கட்





வெஸ்ட் இண்டீஸ் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றுள்ளது. இந்த போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனத்கட், ருதுராஜ் கெய்க்வாட் அணியில் சேர்க்கப்பட்டனர். இதையடுத்து மூன்றாவது போட்டியில் 200 ரன்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்ற இந்திய அணி ஒருநாள் தொடரை கைப்பற்றியது. இடது கை வேகப்பந்து வீச்சாளரான 31 வயதாகும் ஜெயதேவ் உனத்கட், இந்த போட்டியில் விளையாடியதன் மூலம் 9 ஆண்டு 252 நாட்களுக்கு பிறகு ஒருநாள் போட்டியில் இந்திய அணிக்கு திரும்பியதன் மூலம் அவர் 27 ஆண்டு கால சாதனையை முறியடித்துள்ளார். இதற்கு முன்னர் இந்திய முன்னாள் ஓல் ரவுண்டர் ராபின் சிங், 7 ஆண்டு 230 நாட்கள் கழித்து களமிறங்கியது தான் ஒருநாள் போட்டிகளில் அதிக இடைவெளி விட்டு விளையாடியதாக இருந்தது.

இதைத் தொடர்ந்து ஜெயதேவ் உனத்கட் கடைசியாக 2013 ஆம் ஆண்டில் இந்திய ஒருநாள் அணியில் விளையாடினார். இதன் பின்னர் தற்போது 2023 இல் மீண்டும் விளையாடியுள்ளார். (4)

# உலக கிண்ண மகளிர் கால்பந்து பிரேசில், ஆர்ஜென்டீனா வெளியேற்றம்

உலக கிண்ண மகளிர் கால்பந்து போட்டி அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. ஹேமில்டனில்நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் "ஜி" பிரிவில் உள்ள சுவீடன்-ஆர்ஜெனடீனா அணிகள் மோதின. இதில் சுவீடன் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வீழ்த்தியது.

அந்த அணி "ஹாட்ரிக்" வெற்றியை பெற்றது. தென் ஆபிரிக்காவை 2-1 என்ற கணக்கிலும் இத்தாலியை 5-0 என்ற கணக்கிலும் வீழ்த்தி இருந்தது. இதே பிரிவில் வெலிங்டனில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா-இத்தாலி அணிகள் மோதின. இதில் தென் ஆபிரிக்கா 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

"ஜி" பிரிவில் சுவீடன் 3 வெற்றியுடன் 9 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும் தென் ஆபிரிக்கா 1 வெற்றி, 1 டிரா, 1 தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தையும் பிடித்து நாக்அவுட்டான 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றன. இத்தாலி 1 வெற்றி, 2 தோல்வியுடன் 3 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்தையும் ஆர்ஜென்டீனா ஒரு டிரா, 2 தோல்வியுடன் 1 புள்ளிகள் பெற்று கடைசி இடத்தையும் பிடித்தன.

இத்தாலி, ஆர்ஜென்டீனா அணிகள் வெளியேற்றப்பட்டன. சிட்னியில் நடந்த "எப்" பிரிவு ஆட்டம் ஒன்றில் பிரான்ஸ்-பனாமா அணிகள்மோதின. பிரான்ஸ் அணி கோல் மழை பொழிந்தது. அந்த அணி 6-3 என்ற கோல் கணக்கில் பனாமாவை வீழ்த்தியது.

இதே பிரிவில் மெல்போர்னில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் பிரேசில்- ஜமைக்கா அணிகள் மோதின. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி "டிரா" ஆனது. ஜமைக்காவை வீழ்த்த முடியாததால் பிரேசில் அணி அடுத்த சுற்று வாய்ப்பை இழந்தது. இந்த பிரிவில் பிரான்ஸ் 7 புள்ளியுடன் முதல் இடத்தையும் ஜமைக்கா 5 புள்ளியுடன் 2 ஆவது இடத்தையும் பிடித்து 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றன.

பிரேசில் 4 புள்ளியுடன் 3 ஆவது இடத்தையும் பனாமா புள்ளிஎதுவும்பெறாமல் 4 ஆவது இடத்தையும் பிடித்து வெளியேறின. நேற்று முன்தினம் "லீக்" ஆட்டங்கள் முடிவடைந்தன.

இதுவரை சுவிட்சர்லாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா, நைஜீரியா, ஜப்பான், ஸ்பெயின், இங்கிலாந்து, டென்மார்க், நெதர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜமைக்கா, சுவீடன், தென் ஆபிரிக்கா ஆகிய அணிகள் 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. 2 ஆவது சுற்றுப்போட்டிகள் நாளை தொடங்குகிறது. (4)

# அமெ.கால்பந்து வீரருக்கு எமனாக மாறிய முதலை



கடுமையான வெப்பம் காரணமாக ஆற்றில் நீராடச் சென்ற கால்பந்து வீரரை முதலை ஒன்று விழுங்கி விட்ட சம்பவம் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அமெரிக்க நாடான கோஸ்ட்டா ரிக்காவை சேர்ந்தவர் 29 வயதான இயேசு ஆல்பர்டோ லோபஸ் ஓர்டிஸ் என்ற கால்பந்து வீரரே துரதிர்ஷ்டவசமாக முதலைக்கு இரையாகியுள்ளார்.

அந்த முதலையை துரத்திச் சென்று உள்ளூர் மக்களே துப்பாக்கியால் சுட்டு, கால்பந்து வீரரின் சடலத்தை மீட்டதாக கூறப்படுகிறது. (4)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளை இழந்த இங்கிலாந்து, அவுஸ்திரேலியா

சமீபத்தில் நடந்த ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் தலா 2 வெற்றிகளைப் பெற்றதால் அத்தொடர் சமனில் முடிந்தது. இந்நிலையில் ஆஷஸ் தொடரில் மெதுவாக ஓவர்கள் வீசியதாக அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு அபராதத் தொகை மற்றும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான அபராதப் புள்ளிகளை ஐ.சி.சி விதித்துள்ளது.

இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி தாமதமாக பந்து வீசியதால் ஐ.சி.சி நடவடிக்கை எடுத்துள்ளது. முதல் டெஸ்டில் 2 ஓவர்களையும் இரண்டாவது டெஸ்டில் 9 ஓவர்களையும் மூன்றாவது டெஸ்டில் 3 ஓவர்களையும் ஐந்தாவது டெஸ்டில் 5 ஓவர்களையும் இங்கிலாந்து குறைவாக வீசியது.

இதற்காக ஒரு ஓவருக்கு ஒரு அபராதப் புள்ளி வீதம் அந்த அணிக்கு 19 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆஷஸ் தொடரில் 2 வெற்றி, ஒரு டிரா என மொத்தம் 28 புள்ளிகளை இங்கிலாந்து பெற்றது. 19 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டதால் வெறும் 9 புள்ளிகளை மட்டுமே பெற்ற இங்கிலாந்து அணி புள்ளிகள் பட்டியலில் 5 ஆம் இடத்துக்கு இறங்கியது. இதேபோல், 4 ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா அணியும் ஓவர்கள் வீச அதிக நேரம் எடுத்துக் கொண்டது.

10 ஓவர்கள் குறைவாக வீசியதால் அந்த அணிக்கு 10 அபராதப் புள்ளிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 18 ஆக குறைந்தது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் அவுஸ்திரேலியா 3 ஆவது இடத்தில் உள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்க தொடர்ந்தும் வலியுறுத்தப்படும்

## அண்ணாமலை தெரிவிப்பு

(டில்லி)

**கச்சதீவை மீட்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதாக பாரதீய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**

என் மண், என் மக்கள் என்ற தொனிப் பொருளில் பாதயாத்திரையை மேற்கொண்டு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2004 முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், 85 தமிழக கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும், தற்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் அவ்வாறான எந்தவொரு பாதகமான செயற்பாடும் இடம்பெறவில்லை.

இந்தநிலையில், இலங்கையிடம் இருந்து கச்சத்தீவை மீளப் பெறுவதற்கு இந்திய மத்திய அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதாக அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார். (நி-5)



# பேருந்து விபத்துகளால் ஏற்படும் பாரிய நட்டங்கள்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 1400 பேருந்துகள் வருடாந்தம் விபத்திற்குள்ளாகுவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

குறித்த பேருந்துகளை பழுது பார்த்து மீள போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக வருடமொன்றுக்கு 465 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த பேருந்துகள் விபத்திற்குள்ளானதன் பின்னர் அவற்றை மீள போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு தேவைப்படும் காலப்பகுதிக்குள் இலங்கை போக்குவரத்து சபைக்கு 80 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# அவசியமான பகுதிகளுக்கு மட்டுமே கால்நடை வைத்தியர்கள் நியமனம்

(கொழும்பு)

அத்தியாவசியமான பகுதிகளுக்கு மாத்திரம் கால்நடை வைத்தியர்களை நியமிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கால்நடை வைத்தியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கால்நடைகள் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் சில இடங்களில் கால்நடை வைத்தியர்களுக்கான தேவை காணப்படாத இடங்களில் அவர்கள் பணியாற்றுவதாக அந்த சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான கால்நடை வைத்தியர்களை தேவை காணப்படுகின்ற பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்துமாறும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)


16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர். **வயித்தி காங்கேசு**
தோற்றம் –18.02.1935
மறைவு –23.04.2007

அமரர். **காங்கேசு புவனேஸ்வரி**
தோற்றம்– 01.10.1950
மறைவு– 26.07.2021

*தண்ணீர் இல்லாத குளத்தில்*
*தத்தளிக்கும் மீன்கள் போல் எம்*
*தெய்வங்கள் இல்லாத உலகில்*
*தவிக்கின்றோம் நாம்*

62/1, கதிரமலை வீதி,
சுன்னாகம். (16600)

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

04.08.2023
ஆடி 19, வெள்ளிக்கிழமை
திருதியை பிற்பகல் 5.53 மணிவரை
சதயம் பிற்பகல் 12.20 மணிவரை

சுபநேரம் -6.04-7.34 மணிவரை
இராகுகாலம்-10.34-12.04 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்- ஆயிலியம், மகம்.

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


கடகம்

குடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது.


துலாம்

பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


சிம்மம்

இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


விருச்சிகம்

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.


கும்பம்

புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்

எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


கன்னி

கூட்டு முயற்சிகளில் வெற்றியுண்டு, குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம்.


தனுசு

பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்படநேரிடலாம், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

**பக்தி மிகுதியால் தெய்வத்திடம் அதிகம் செய்ய வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் மீற்றர் பொருத்தாத மு.வண்டிகளை அகற்றும் பணியில் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரப் பகுதி முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகளை அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.**




யாழ்.நகர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் பொலிஸார் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தாமையினால் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாத முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என யாழ்.மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் கடந்த இரண்டு மாத காலத்திற்கு முன்னரே அறிவித்து, இரண்டு மாத கால அவகாசம் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு வழங்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-33)

# யாழ்.கோண்டாவில் கடையொன்றில் தீப்பரவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் உள்ள கடையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை நண்பகல் குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு சென்ற யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீப்பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-33-104)

# சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு பொன்னாவெளி மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொன்னாவெளி மக்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர். கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ நிறுவனத்தினால் சீமெந்து தொழிற்சாலை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ஒரு ஏக்கர் காணியை முதல் கட்டமாக பெற்று ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் குறித்த தொழிற்சாலையால் தமது வளம் சுரண்டப்படுவதாகவும் எதிர்காலத்தில் நிலங்கள் உவராக மாறும் நிலையுள்ளதாகவும் சுவாசம் சார்ந்த பிரச்சினை ஏற்படும் எனவும் தெரிவித்து கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு கிராமங்களைச் சேர்ந்த 200 இற்கு மேற்பட்ட மக்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் பொன்னாவெளி பொதுநோக்கு மண்டபத்திலிருந்து ஆரம்பித்து குறித்த நிறுவனம் ஆய்வுப் பணியை முன்னெடுத்து வரும் இடம் வரை பேரணியாக சென்றது.

குறித்த போராட்டத்தில் மத தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-5-316)

# மலையக எழுச்சிப் பயணத்திற்கு ஆதரவாக யாழிலும் பேரணி




(யாழ்ப்பாணம்)

மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை பேரணி இடம்பெற்றது.

யாழ்ப்பாண மத்திய பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு பேரணி இடம்பெற்றது.

இந்த பேரணியை மலையக மக்கள் மற்றும் யாழ். சிவில் சமூகம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. "வேர்களை மீட்டு உரிமை வென்றி" எனும் தொனிப் பொருளில் தலைமன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை மலை யகம் 200ஐ முன்னிட்டு இந் நடைப்பயண நிகழ்வு ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (4-5-104)

# தொலைபேசிகளை திருடிய மூவர் விளக்கமறியலில்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பல தொலைபேசிகளை திருடிய குற்றச்சாட்டின் கீழ் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் பல்கட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என அறியமுடிகிறது.

இந்நிலையில் விசாரணையின் போது அவர்கள் கைப்பேசிகளை திருடியதை ஒத்துக் கொண்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட வேளை, அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (4-5-104)




# 'சோறு' குறுந்திரைப்படம் திரையிடல்

(யாழ்ப்பாணம்)

இயக்குநர் எம்.என்.லிப்ஸியாவின் "சோறு" குறுந் திரைப்படம் நாளை மறுதினம் மாலை 3 மணிக்கு சாவகச்சேரி பாலா திரையரங்கில் திரையிடப்படவுள்ளது. (4-5)

# தீவகம் முழுவதையும் அதிகார சபைக்குள் கொண்டுவர புதிய சட்டமூலம்

## கஜேந்திரகுமார் எம்.பி

(யாழ்ப்பாணம்)

சர்வதேசத்திற்கு, தமிழ் மக்களிற்கு தீர்வு வழங்கப் போவதாக கூறி அரசியலமைப்பிலுள்ள 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்க பேச்சுவார்த்தை நடத்துவதானது ஈழத்தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதைக் காட்டுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமுல்படுத்தல் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து மீண்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத்திற்கு, தமிழ் மக்களிற்கு தீர்வு வழங்கப் போவதாக கூறி அரசியலமைப்பிலுள்ள 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்க பேச்சுவார்த்தை நடத்துவதானது ஈழத்தமிழர்களை ரணில் விக்கிரமசிங்க கணக்கெடுக்கத் தயாரில்லை என்பதைக் காட்டுகின்றது.

இதை தெரிந்து கொண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழ்த் தரப்புகளின் பேச்சுதலுக்கு வாய்ப்புக்களை இல்லாமலாக்கி சிங்கள மக்கள் ஏற்று கொள்ளாத ரணில் விக்கிரமசிங்கவிற்கு முண்டு கொடுப்பதாகவே அமைகின்றது.

13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதாகக் கூறி மக்களை ஏமாற்றும் அதே தருணம் இந்த அரசு தீவகம் முழுவதையும் அதிகார சபைக்குள் கொண்டு வந்து அனைத்து நிர்வாகத்தையும் கொழும்பின் கீழ் கொண்டு வருவதற்குரிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தீவகம் இந்திய- இலங்கைக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. எனவே அது பேரம்பேசுதல்களுக்காக சிங்களத் தரப்பிடம் இருக்க வேண்டுமென்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவித்தார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 6 மாத காலத்தில் 600 விரிவுரையாளர்கள் வெளியேற்றம்

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம்

(கொழும்பு)

கடந்த 6 மாத காலப்பகுதிக்குள் 600 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் பரண ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் சம்மேளனம், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு இடையே கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, தொழில் ரீதியான சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி ஏற்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சம்மேளத்தின் தலைவர் பரண ஜயவர்தன கூறுகையில்,

கடந்த இறுதி 6 மாதங்களில் 600 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது தொழிலிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக பல்கலைக்கழகங்களில் சில பீடங்களை நடத்தி செல்வதில் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளோம். 600 இற்கும் அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

வரிக்கொள்ளை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். பேராசிரியர்கள் இவ்வாறு விலகி செல்வதை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் வரிக்கொள்ளை தொடர்பில் சாதகமான தீர்மானமொன்றைமேற்கொள்ளும் என நாம் கடந்த 6 மாதங்களாக எதிர்பார்த்தோம்.

ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதமளவில் எமக்கு ஏதேனும் நிவாரணங்கள் வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்தது. இருப்பினும் இதற்கு அரசாங்கம் தயார் இல்லை என தெளிவாகிறது. நாம் இது தொடர்பில் கவலையடைகிறோம்.

எனவே, எதிர் காலத்தில் கடுமையான தீர்மானமொன்றை எடுப்பது தொடர்பில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி வருகிறோம் எனத் தெரிவித்தார். (நி-5)

# அரியாலைப் பகுதியில் கைக்குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரியாலை பூம்புகார் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-33)

# குமாரவெல்கம மீது தாக்குதல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மத்துகம நகரில் வைத்து சிலர் தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்துகம நகரிலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பாராளுமன்ற உறுப்பினர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் தாக்கியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-5)

## மகாவலி வலயத்தில்

# 20 ஆயிரம் பேருக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை

## அமைச்சர் ரொஷான் ரணசிங்க

(கொழும்பு)

மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரம் இல்லாத 20 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மேலும் 15 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணி இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என்று விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தில் வசிக்கும் ஒரு சிலருக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உறுதிகள் இருக்கவில்லை.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய புதிய வேலைத் திட்டத்தின் ஊடாக காணி உறுதிகளை வழங்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# ஒற்றையாட்சியுடன் கூடிய மாகாண சபை முறைமையே சிறந்தது - வாசுதேவ

(கொழும்பு)

ஒற்றையாட்சியுடன்கூடிய மாகாண சபை முறைமை என்பதுதான் எமது கொள்கையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாணசபை முறைமையுடன் ஒற்றையாட்சியும் ஒற்றையாட்சியுடன் கூடிய மாகாணசபை முறைமை என்பது தான் எமது கொள்கையாகும்.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள்வழங்கப்படவேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக சர்வகட்சி மாநாடு இடம்பெற்றது. இதில் ஜனாதிபதியோ தனது தனிப்பட்ட யோசனையை எம் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முயன்றார்.

ஆனால், அங்கு கலந்து கொண்டவர்கள் அனைவரும் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு தான் வலியுறுத்தினார்கள்.



இதனால், அவருக்கு தனது திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

ஒற்றையாட்சிக்குள் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது, இறுதியில் வழங்கப்படவுள்ள அதிகாரங்களைப் பொறுத்தே தீர்மானிக்க வேண்டும்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


வடமாகாண மாணவர்களுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி
வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்)
G.C.E (O/L) கா.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு-2023

வடமாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளது.

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 09.08.2023 புதன். | ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 10.08.2023 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 11.08.2023 வெள்ளி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண் பாடசாலை மாணவர்கள்) மட்டும் | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 12.08.2023 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 13.08.2023 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (கலவன் பாடசாலை மாணவர்கள்) மட்டும் | மு.ப. 7.00-பி.ப. 2.00 |
| 14.08.2023 திங்கள் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 15.08.2023 செவ்வாய் | மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி (மாங்குளம்) | மு.ப. 8.30-பி.ப. 2.00 |
| 16.08.2023 புதன் | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 17.08.2023 வியாழன் | மன்னார் நகர சபை மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |
| 18.08.2023 வெள்ளி | வவுனியா நகர சபை மண்டபம் | மு.ப. 8.00-பி.ப. 2.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறவும்"

**குறிப்பு:** மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1. தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) LLB 077 113 3400
2. பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம்-இலங்கை திரு.கந்தசாமி சக்திதரன் (மாகாண இணைப்பாளர் மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி மாங்குளம்)- 077 070 3360
3. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- வலயக்கல்வி அலுவலகம்) 077 314 4527
4. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசியலொத்தர் சபை 077 385 0841

(இ)

ஊடக அனுசரணை:- வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 173

# வாழ்க்கையின் வெற்றிக்கு தன்னம்பிக்கை முதற்படி

கொரோனா ஊரடங்கு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறந்து வைக்கப்பட்ட நேரம் இது. தன்னுடைய மகன் எப்படியாவது நல்ல மதிப்பெண் பெற்றுவிட வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் விழிமாவின் தந்தை. ஆம் விழிமா பன்னிரெண்டாம் வகுப்பு படித்து வந்த மாணவன்.

ஆனால் வழக்கத்துக்கு மாறாக தன்னுடைய மகனின் நடத்தையில் ஏதோ ஒரு புதிய மாற்றத்தை கவனித்து வந்தார் விழிமாவின் தந்தை. விழிமா அடிக்கடி தனிமையைத் தேடி செல்வதும் ஒரு வித பதற்ற உணர்வோடு செயற்படுவதுமாக இருந்தான். முற்றிலுமாக மாறுபட்ட விழிமாவாக தென்பட்டான். என்ன விழிமா ஏன் இப்படி இருக்கிறாய் என்று யாரேனும் கேட்டால் ஒன்றுமில்லை என்று நழுவி விடுகிறான்.

ஆனால் சிறுவயது முதல் விழிமாவும் அவனது தந்தையும் நண்பர்கள் போல மிகவும் நெருக்கமாக பழகி வந்துள்ளனர். விழிமாவால் தன் தந்தையிடம் எதையும் மறைக்க இயலாது. இருப்பினும் இம்முறை விழிமாவின் தந்தைக்கு சிறிதே ஆச்சரியம். விழிமா பள்ளி செல்லத் தொடங்கிய நாள் முதல் நம்மிடம் சகஜமாக பழகு வதில்லையே. ஏதோ ஒன்றை நினைத்து உள்ளுக்குள் மறுகிக் கொண் டிருப்பது போல் தோன்றுகிறது என்றே அவரும் நினைத்தார்.

தென்றல் சற்றே விசும்பலாய் வீசினால் வரும் சத்தம் போல் ஓர் அழுகுரல் விழிமாவின் அறையில் இருந்து வந்தது.

இதை அந்த மாலை வேளையில் விழிமாவின் அறையை கடந்து மாடிக்குச் செல்லும் போது கேட்ட விழிமாவின் தந்தையின் உள்ளம் நொருங்கிப் போனது. என்னவாயிற்று இவனுக்கு. என்ன செய்வதென்றே தெரியவில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்த விழிமாவின் தந்தை, அறையைத் திறந்து உள்ளே சென்றார். அங்கு ஓர் மூலையில் புத்தகங்களை கட்டிப்பிடித்த வண்ணம் அழுது கொண்டிருந்த விழிமாவை கண்டு ஆடிப்போனார் தந்தை.

என்ன விழிமா? என்ன இது? என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஏன் இப்படி நடந்து கொண்டிருக்கிறாய்? எல்லாம் நன்றாகத்தானே சென்று கொண்டிருக்கிறது. இல்லை ஏதேனும் பிரச்சினையா? உன் நண்பர்களை நான் சந்தித்து விட்டுத் தான் வருகிறேன். அவர்களிடம் கூட நீ சரியாகப் பேசுவதில்லையாமே. ஏன்னாயிற்று விழிமா? அப்பாவிடம் மறைக்காமல் எல்லாவற்றையும் கூறு என்று நம்பிக்கையுடன் கேட்டார் விழிமாவின் தந்தை.

அப்பாவின் கண்களைக் கண்ட விழிமாவால் தன் கண்ணீரை அடக்க முடியவில்லை. தந்தையைக் கட்டியணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டு கவலைகளை கரைத்துக் கொண்டிருந்தான். சிறிது ஆசுவாசத்திற்குப் பிறகு தன் தந்தையிடம் பேசத் தொடங்கினான் விழிமா.

அப்பா நான் ஒன்றரை ஆண்டுகளாக பள்ளிக்குச் செல்லவில்லை. கொரோனா பேரிடர் காலத்தால் வீட்டில் ஆன்லைன் வகுப்பில் மட்டுமே கலந்து கொண்டேன். என்ன இருந்தாலும் வீட்டில் இருந்து என்னால் சரிவர என் பாடங்களைப் படிக்க முடியவில்லை. இப்பொழுது நான் பன்னிரெண்டாம் வகுப்பு வந்து விட்டேன். இங்கு புத்தகங்களின் அடர்த்தியும் நேர்த்தியும் என் தன்னம்பிக்கையை அசைத்து பார்க்கின்றன. என்னால் என் பயத்தை விட்டு வெளியே வர முடியவில்லை.

நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்று நீங்கள் மிகவும் ஆசைப்படுகிறீர்கள். நானும் நன்றாகப் படிக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன். ஆனால் ஏனோ இந்த அடுக்கி வைத்த புத்தகங்களும் அடுத்தடுத்து வரும் தேர்வுகளும் என்னை பயமுறுத்துகின்றன. என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்படி இந்தப் பயத்தை கையாள்வது என்றும் தெரியவில்லை. இதனால் தான் அழுது கொண்டிருக்கிறேன் அப்பா என்றான் விழிமா. அப்பா விழிமாவின் பிரச்சினையை உணர்ந்தார். இப்போது விழிமாவிற்கு தேவைப்படுவது அவனுடைய பயத்தைக் கடந்து வந்து உள்ளார்ந்த தன்னம்பிக்கையை தரும் உணர்வு என்பதை உணர்ந்தார்.

அப்பா விழிமாவை வீட்டின் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே விழிமாவின் கையில் ஒரு பலூனை கொடுத்து அதில் தண்ணீரை நிரப்பச் சொன்னார். விழிமாவும் ஏன் என்று கேட்க மனமில்லாத மனநிலையில் அதை செய்தான். தண்ணீரை நிரப்பிய பிறகு விழிமாவைப் பார்த்து விழிமா இந்தத் தண்ணீர் நிரப்பிய பலூனை அந்தத் தண்ணீர் நிரப்பிய தொட்டியில் சென்று மிதக்க விடு என்றார். விழிமாவும் நீர் நிரம்பிய அந்த பலூனை தொட்டியில் விட்டான். ஆனால் பலூன் மிதக்கவில்லை. மூழ்கியது. அப்பாவிடம் சென்று பலூன் மிதக்கவில்லை அப்பா என்று கூறினான்.

விழிமாவின் அப்பா, சரி விழிமா இப்போ அந்த பலூனில் உள்ள தண்ணீரை வெளியேற்றிவிட்டு வெறும்பலூனை ஊது என்றார். விழிமாவும் பலூனை ஊதினான். இப்போது காற்று நிரம்பிய இந்தப் பலூனை தண்ணீர் நிரப்பிய தொட்டியில் மிதக்க விடு என்றார் அப்பா. விழிமாவும் அந்த பலூனை தொட்டியில் சென்று மிதக்க வைத்தான். பலூன் தண்ணீருக்கு மேலே மிதந்தது. விழிமா மகிழ்ச்சியுடன் அப்பா பலூன் இப்போது மிதக்கிறது என்றான்.

இப்பொழுது விழிமாவின் அப்பா சொன்னார், விழிமா இதோ பார் இந்த தொட்டி தான் உன்னுடைய வாழ்க்கை, இந்த தொட்டியில் உள்ள தண்ணீர் தான் உன் வாழ்க்கையில் உள்ள பிரச்சினைகள், பயம், சோதனை, சவால்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தப் பலூன் தான் உன்னுடைய மனது இதில் நீ ஊதிய காற்று தான் உன்னுடைய முயற்சி, விடாமுயற்சி, நம்பிக்கை, தன்னம்பிக்கை எல்லாம். உன் மனம் என்னும் பலூனில் பிரச்சினைகளையும் பயத்தையும் சுமந்து கொண்டு வாழ்ந்தால் நீ அந்தப் பயத்திலும் பிரச்சினையிலும் மூழ்கிப் போவாய். அதுவே உன் மனம் என்னும் பலூனில் முயற்சி மற்றும் தன்னம்பிக்கை எனும் காற்றை நிரப்பிக் கொண்டால் வாழ்க்கை எனும் தொட்டியில் மூழ்காமல் நீ மிதக்கலாம். உண்மையான வாழ்க்கையில் ஜெயிக்கவும் செய்யலாம். உண்மையை உணர்ந்த விழிமாவின் உள்ளத்தில் தன்னம்பிக்கை உணர்வு தழும்பத் தொடங்கியது. நன்றாக படித்து நல்ல மதிப்பெண்ணும் பெற்றான்.

# கனேடிய தீவொன்றை நெருங்கும் இராட்சத பனிப்பாறை



(ஒட்டாவா)

கனேடிய தீவொன்றை இராட்சத பனிப்பாறை ஒன்று நெருங்கும் காட்சிகள் இணையத்தில் வெளியாகி நெட்டிசன்களை வியப்பிலாழ்த்தியுள்ளன.

கனடாவின் நியூஃபவுண்ட்லாந்து பகுதியை நோக்கி அந்த இராட்சத பனிப்பாறை நகர்ந்து வருகிறது. அந்தப் பகுதியில் அடிக்கடி பனிப்பாறைகள் மிதந்து வருவதுண்டாம்.

குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், இந்த பகுதியில்தான், 1912ஆம் ஆண்டு பனிப்பாறை ஒன்றில் மோதி டைட்டானிக் கப்பல் மூழ்கியதாம்.

இந்நிலையில், நியூஃபவுண்ட்லாந்து பகுதியை நோக்கி இராட்சத பனிப்பாறை ஒன்று நகர்ந்து வரும் காட்சிகள் டுவிட்டரில் வெளியாகியுள்ளன.

ஸ்பிரிட்டர் ரீம் என்னும் பெயரில் டுவிட்டரில் செய்திகள் பகிரும் ஒருவர் பகிர்ந்துள்ள அந்த வீடியோ வைரலாகியுள்ளது. (நி-5)

# அமெரிக்காவில் உயரிய பொறுப்பில் இந்திய வம்சாவளி பெண் நியமனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புலனாய்வு முகாமையின் உயர் பதவியில் இந்திய வம்சாவளி பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி, அமெரிக்காவில் உதா மாகாணத்தின் எப்.பி.ஐ தலைவராக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஷோஹினி சின்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஷோஹினி சின்கா இதற்கு முன்பு இயக்குநர் ரேயின் சிறப்பு உதவியாளராக இருந்துள்ளார்.

மேலும் பயங்கரவாத எதிர்ப்பு விசாரணை குழுவின் உயர் அதிகாரியாக இருந்து பல்வேறு சாதனைகளை புரிந்து உள்ளார்.

கனடாவை தலைமையிடமாக கொண்டு வேற்று கிரகவாசிகள் குறித்து ஆய்வு செய்யப்படும் திட்டத்தின் முகாமையாளராகவும் பதவி வகித்துள்ளார். (நி-5)

# இந்தியா-பாகிஸ்தான் இடையிலான பாகிஸ்தான் பிரதமர்

(இஸ்லாமபாத்)

"இந்தியா- பாகிஸ்தான் இடையிலான நேரடி பேச்சுவார்த்தைக்கு நாங்கள் ஆதரவு அளிக்கத் தயாராக உள்ளோம்" என்கிறார் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர்.

இந்தியாவுடன் எந்தவிதமான போரையும் நடத்த விரும்பவில்லை என்றும் நிலுவையில் உள்ள அனைத்து தீவிரமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக வும் பாகிஸ்தானின் பிரதமர் ஷெரிஃப் இதன் போது பதிலளித்திருந்தார்.

பாகிஸ்தானிலுள்ள அணு சக்தி, தற்காப்பு நோக்கத்திற்காக மாத்திரமே உள்ளது. அது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்காக அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நமது தீவிரமான பிரச்சினைகளை அண்டை நாடுகள் புரிந்து கொள்ளா விட்டால் அண்டை நாடுகளுடன் நட்பாக இருக்க முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்வது முக்கியம் என்றும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## சீனாவில் 140 ஆண்டுகளில் இல்லாத கனமழை

## சுமார் 20 பேர் உயிரிழப்பு; 27 பேர் மாயம்

(பீஜிங்)

**சீனாவின் தலைநகரான பீஜிங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கனமழை பதிவாகியுள்ளதாகவும் இதுவரையில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.**



சீன தலைநகர் பீஜிங் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல வீடுகள் அடித்து செல்லப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

கனமழைக்கு இதுவரை 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகவும் மேலும் 27 பேர் காணாமல் போனதாகவும் கூறப்படுகிறது. பீஜிங்மற்றும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளில் 744.8 மி.மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி-5)

## உக்ரைனில் தானிய மையங்களை தாக்கிய ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள்



(கீவ்)

ருமேனியா எல்லைக்கு அருகில் அமைந்துள்ள டன்யூப் நதிப் பகுதியில் துறைமுகக் கட்டமைப்புகளைக் குறி வைத்து ஆளில்லா விமானம் மூலம் ரஷ்யா தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் தானியங்களை சேகரித்துவைப்பதற்கான கிடங்கு பலத்த சேதமடைந்துள்ளதோடு, ஏராளமான துறைமுகக் கட்டமைப்புகள் தீப்பற்றி எரிந்துள்ளன என்றும் உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சர்வதேச அளவில் உணவுப் பொருள் விநியோகம் தடைப்பட்டு உலக நாடுகளில் உணவுப் பொருள் பற்றாக்குறை நெருக்கடி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நைஜரில் வெடித்த இராணுவ கிளர்ச்சியால் பிரான்ஸ் மக்களை அதிரடியாக வெளியேற்றும் அரசு

(நைஜர்)

நைஜரில் இராணுவ கிளர்ச்சி வெடித்துள்ள நிலையில் அந்நாட்டில் வசித்து வந்த சொந்த நாட்டவர்களையும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களையும் பிரான்ஸ் அரசாங்கம் பாதுகாப்பாக வெளியேற்றி வருகிறது.

முதற்கட்டமாக நைஜரிலிருந்து நேற்று முன்தினம் 262 பிரான்ஸ் குடிமக்களை ஏற்றிக் கொண்டு அந்நாட்டின் தலைநகரமான நியாமியில் இருந்து முதல் விமானம் புறப்பட்டு சென்றது.

இந்நிலையில் பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளின் குடிமக்களைக் கொண்ட குறித்த விமானம், நேற்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தரையிறங்கியுள்ளது.

நைஜரின் வான்வெளி மூடப்பட்டதுள்ளதால் அந்நாட்டில் தமது மக்கள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு அங்கிருந்து அவர்களை வெளியேற்றுவதாக பிரான்ஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

மேலும் எஞ்சியிருக்கும் பிரான்ஸ் பிரஜைகளை வெளியேற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் நியாமியில் உள்ள விமான நிலையத்திற்குச் செல்லும்படியும் பிரான்ஸ் அரசாங்கம் தமது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (நி-5)

## பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த கட்டுப்பாடு விதித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 32 கோடி தொன்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது.

இதில் 95 சதவீதம் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகள் என நுகர்வோர் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு சபை அறிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றான நியூயார்க்கில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உணவு விநியோக நிறுவனங்களில்



பிளாஸ்டிக் கோப்பைகள், கரண்டி மற்றும் கத்திகள் போன்றவற்றை வாடிக்கையாளர் கேட்காமல் வழங்கக் கூடாது எனவும் இதனை மீறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் குப்பைகளை குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்த நகர தலைவர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார். (நி-5)

## ...ான நேரடி பேச்சுவார்த்தைக்கு ...ர் ஷெரீஃப் ஆதரவு

தெரிவித்தார்.

கடந்த 75 ஆண்டுகளில் பாகிஸ்தானால் நிகழ்த்தப்பட்ட மூன்று போர்களாலும் உயிரிழப்புக்கள் பொருளாதார இழப்பு மற்றும் வளங்கள் பற்றாக்குறையே ஏற்பட்டுள்ளது. இனியும் இவ்வாறான இழப்புகளை விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமல்லாமல் பாகிஸ்தான் அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் சிறந்த நட்புறவுகளை மேம்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறி முடித்தார்.

இவற்றுக்கிடையே, எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் முழுவதுமாக கைவிடும் வரை பேச்சுவார்த்தைக்கு தயார் இல்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்கொம்பன் காட்டுப் பகுதியில் நேற்று பாரிய தீப்பரவல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் 65 ஏக்கர் வீட்டுத் திட்டத்தின் பின் பகுதியில் உள்ள காட்டுப்பகுதி யில் தீ பரவியுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று தின ங்களாக எரிந்து வந்த நிலை யில் நேற்று பாரிய அளவில் தீ பரவ ஆரம்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளர் தயாபரன் சென்று கண்காணித்துடன், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவிற்கும் தகவல் வழங்கியுள் ளார்.

தொடர்ந்து பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவின் உதவி யுடன் தீப்பரவலை கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் காட்டுப் பகுதிக்குள் செல்வதற்கு பாதை இல்லாத நிலை ஏற்பட்டது.

அப்பகுதி மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டது. தீ பரவலுக் கான காரணம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர். (4-5-100-316)

## யாழ்.பல்கலைக்கழக

# கிளிநொச்சி வளாக உள்ளக வீதிகளை புனரமைக்க கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் உள்ளக வீதிகளை புனரமைத்து தரு மாறு பல்கலைக்கழக நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நக ரில் அமைந்துள்ள யாழ்.பல் கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் உள்ள சுமார் 5.8 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் மிக மோசமாக சேதமடைந்து பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.


குறித்த உள்ளக வீதிகள் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி களை புனரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் தெரிவு செய் யப்பட்டு ஒப்பந்தங்கள் செய் யப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் அரசா ங்கம் இத்திட்டத்தை நிறுத்திய தால் இந்த வீதி புனரமைப்பு திட்டங்களும் நிறுத்தப்பட்டுள் ளன.

இதனால் குறித்த வீதிகளின் ஊடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகி றது.

ஆகவே குறித்த வீதிகளை உரிய தரப்புக்கள் முன்வந்து புனரமைப்பு செய்து தருமாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளி நொச்சி வளாக நிர்வாகம் கோரி க்கை விடுத்துள்ளது. (4-5-315)

# மாடுகளை திருடிச் சென்ற ஒருவர் நவாலியில் கைது



(அராலி)

3 மாடுகளை வட்டுக் கோட்டை பகுதியில் இருந்து நேற்று திருடிச் சென்ற ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கயஸ் வாகனத்தில் மாடு களை கடத்துவதாக, மானிப் பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இர கசிய தகவலின் அடிப்படையில், நவாலி மயானத்துக்கு அருகில் வைத்து, யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியை சேர்ந்த 28 வயதுடைய நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்துவத ற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்ட னர். (4-5-104)

# பெண்ணின் சங்கிலி அறுப்பு

(நெளுக்குளம்)

வவுனியா, குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு காளி கோவிலுக்கு அருகாமை யில் பெண் ஒருவர் சென்றுள் ளார். இதன்போது பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அந்தப் பெண் அணிந் திருந்த தங்கச் சங்கிலியை அறு த்துக் கொண்டு தப்பிச் சென்றுள் ளனர்.

குறித்த நபர்களை சிலர் துர த்தி சென்ற போதும் அவர்களை பிடிக்க முயலவில்லை என தெரி விக்கப்படுகின்றது. (4-5-299)

# 2 ஆயிரம் கடலட்டைகள் மன்னாரில் மீட்பு

## இருவர் கைது



(மன்னார்)

மன்னாரில் இருந்து அனு மதிப்பத்திரம் இன்றி கடலட்டை களை கொண்டு சென்ற இருவர் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள் ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடலட்டைகள் உயிருடன் மீட்கப் பட்டுள்ளன.

குறித்த சோதனை சாவடியில் வைத்து இராணுவத்தினரால் குறித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது குறித்த கடலட்டைகள் அனுமதிப்பத் திரம் இன்றி கொண்டு செல்லப் பட்டமை தெரியவந்துள்ளது.

தற்போது கைது செய்யப்பட்ட பல்லவராயன் கட்டு பகுதியைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளும் மன்னார் மாவ ட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ள னர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (4-5-285)

## சிறுபோக செய்கையை அதிகரிக்க

# வன்னேரி, தேவன்கட்டு குளங்களை இணைக்கும் திட்டம் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளம், தேவன்கட்டு ஆகிய நீர்த் தேக்கங்களை இணைப்பு செய் வதன் மூலம் எதிர்காலத்தில் 800 தொடக்கம் 850 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் க.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத் தின் மேற்கு பகுதி நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வன் னேரிக் குளத்தின் கீழ் தற்போது இருநூறு ஏக்கருக்கும் குறை வான பகுதிகளில் மாத்தி ரமே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின் றது.

இதற்கு அருகிலுள்ள தேவன் கட்டு நீர்த்தேக்கத்தை வன் னேரிக் குளத்துடன் இணைப்புச் செய்வதன் மூலம் எதிர்காலத் தில் கூடுதலான நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற் கொள்ள முடியும் என்று விவ சாயிகளால் தெரிவிக்கப்பட்டு வந்தவுடன் அது தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு குறித்த வேலைத்திட்டம் ஆரம் பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வேலைத் திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலே கருத்து தெரிவித்த பிரதி நீர்ப்பா சன பொறியியலாளர் க.கருணா நிதி வன்னேரிக் குளத்தினை யும் தேவன்கட்டு நீர்த் தேக் கத்தையும் இணைப்பின் ஊடாக சிறுபோக செய்கையை விஸ்தரிக்க முடியும். இதுவரை காலமும் வன்னேரிக்குளத்தின் கீழ் 200 ஏக்கருக்கும் குறை வான பகுதிகளிலேயே சிறு போகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனை புனரமைப்ப தன் மூலம் 800 தொடக்கம் 550 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு போக செய்கை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வன்னேரிக் குளம் மற்றும் தேவன்கட்டு குளங்களின் அணைக்கட்டு புனரமைப்பு வேலைத்திட்டம் 300 மில்லியன் ரூபா செலவில் காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டத்தின் (சியாப்) கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (4-5-316)

# வவுனியா இரட்டைக் கொலை சந்தேகநபர்கள் 11 வரை மறியலில்

(வவுனியா)

வவுனியா தோணிக்கல் பகு தியில் வீடு புகுந்து மேற் கொண்ட தாக்குதலில் தம்பதிகள் மரணம் அடைந்தமை தொடர் பில் சந்தேகநபர்களை எதிர் வரும் 11 ஆம் திகதி வரை அநு ராதபுரம் சிறைச்சாலையில் தடு த்து வைக்க வவுனியா நீதிமன் றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் நேற்று முன்தினம் வவுனியா சட்ட வைத்திய அதிகாரியிடம் முற் படுத்திய பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன்போதே வவுனியா, தோணிக்கல் தாக்குதல் சம்ப வத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட ஐந்து சந் தேகநபர்களையும் 11 ஆம் திகதி வரை அநுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கவும் மீண்டும் 11 ஆம் திகதி ஆள் அடை யாள அணிவகுப்பிற்காக 2 ஆம் 3 ஆம் 4 ஆம் 5 ஆம் சாட்சிகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் தாக்குத லுக்காக பயன்படுத்தப்பட்ட வாள்கள், கோடரி, கத்தி மற்றும் இரும்புக்கம்பி என்பன நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட் டிருந்தன. (4-5-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடனட்டை அளவு நுண் பிளாஸ்ரிக் துகள்கள்

# வாராந்தம் மனிதனின் வயிற்றுக்கு செல்கின்றன

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**கடனட்டை அளவு நுண் பிளாஸ்ரிக் துகள்கள் மனிதனின் வயிற்றுக்குள் செல்கிறது என ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் டெலா பண்டார தெரிவித்துள்ளார்.**


நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஊட்டச்சத்து நிபுணர் ரொஷான் டெலா பண்டார இதனை தெரிவித்தார்.

உணவு, குடிநீர் மற்றும் நாம் சுவாசிக்கும் காற்றில் மைக்ரோ பிளாஸ்ரிக் எனும் நுண் நெகிழித் துகள்கள் கலந்திருப்பதாக அவுஸ்திரேலியாவின் நியூகேஸில் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நபர் வாரத்திற்கு 5 கிராம் நுண் நெகிழித் துக்ள்களை உட்கொள்கிறார். அதாவது, ஒரு கடனட்டையின் அளவு நுண் நெகிழித் துகள்களை உட்கொள்கிறார்.

அதன்படி, ஒரு மாதத்தில் 20 கிராமும் மற்றும் வருடத்திற்கு 250 கிராமும் நுகரப்படுகிறது என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நம் உடலுக்குள் நுண் நெகிழித் துகள்கள்



செல்வதற்கு நைலோன் துணி மற்றும் நைலோன் மீன்பிடி வலைகள் முக்கிய காரணங்களாக அமைவதாக பல ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சஜித் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெரும்பாலான நுண் நெகிழித் துகள்கள் நாம் சுவாசிக்கும் காற்றின் மூலம் நம் உடலுக்குள் செல்கின்றன.

நுண் நெகிழித் துகள்களை அதிகமாக உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படலாம். எனவே, தாங்களாகவே பிளாஸ்ரிக் பொருட்களை அழிக்காமல், மறுசுழற்சி செய்யும் மையங்களில் ஒப்படைக்குமாறு மருத்துவர்கள் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டனர்.

பிளாஸ்ரிக் பொருட்களை எரிக்க வேண்டாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது, ஏனெனில் அவை அதிக எண்ணிக்கையிலான நச்சு இரசாயனங்கள் மற்றும் வாயுக்களை வெளியிடுகின்றன என மேலும் அவர் தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 230 |
| பச்சைமிளகாய் | 500 | 300 | 300 | 350 |
| தக்காளி | 250 | 320 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 220 | 300 |
| கோவா | 250 | 230 | 300 | 300 |
| கரட் | 350 | 520 | 520 | 600 |
| பூசணி | 120 | 120 | 120 | 150 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 160 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 140 | 150 |
| பாகற்காய் | 300 | 350 | 200 | 400 |
| வெண்டக்காய் | 150 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 240 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 180 | 300 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 360 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | --- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 260 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 180 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 20 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 80 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2880

### விக்கிரம்

இனிமே நமக்கு வீட்டுல சோறு போட மாட்டாங்க. நாமளும் அயலவங்களுக்கு எத்தனை நாளைக்குத்தான் பாரமா இருக்கிறது இனிமே நானே போட்டுசாப்பிட வேண்டியது தா




### நந்தினி

நான் ஊருக்குப் போய்ட்டா நீங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்க




கணவன்- சாப்பாடு கெடக்குது. மனுசனுக்கு நிம்மதி தான் முக்கியம்

### கணேஷ்

டியூஷன்ல கரண்ட ஆப் ஆயிடுச்சுன்னு வீட்டுக்குப் போக சொன்ன பிறகு



வேகமா ஓடுங்க டா கரண்ட் வந்து திரும்ப உட்கார வைச்சிட போறாங்க

### சந்தியா

ஏங்க கல்யாணம் ஆன புதுசுல என்ன தூக்குவீங்களே அதேமாதிரி தூக்கிட்டு பிரிட்ஜ் கிட்ட போங்க நான் ஐஸ்கிறீம் சாப்பிடனும்



நீ அப்படியே இருமா நான் பிரிட்ஜ இங்க தூக்கிட்டு வரேன்

### ராம்

ஏன்டா 90ஸ்ல பிறந்துட்டு இன்னும் கிட்ஸ்' என்டு சொல்லிட்டு திரியுறே வெட்கமா இல்ல



அய்யோ நீங்க தப்பா புரிஞ்சுட்டீங்க கிட்ஸ்ன்னு சொல்றது எங்க வயசு இல்லைங்க எங்க மனசுங்க

### பிரதாப்

காதலி- எனக்கு வேறு ஒருவரோட நிச்சயம் ஆயிடுச்சி
காதலன்- எனக்கு முன்பே தெரியும்
காதலி- எப்படி?
காதலன்- நேற்று இராத்திரி குடுகுடுப்பக்கரன் வந்து எனக்கு நல்ல காலம் பொறக்குதுன்னு சொன்னான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

247






இதற்கு வேண்டிய கப்பல்களையும் தளபாடங்களையும் சேகரிக்கச் சிறிது காலமாயிற்று. ஆயினும் நாங்கள் அங்கேயே தாமதித்து, கப்பல்களில் படைகளை ஏற்றி அனுப்பினோம். மாதோட்டத்தில் நம் வீரர்கள் பத்திரமாய்ச் சென்று இறங்கினார்கள் என்று தெரிந்த பிறகே அங்கிருந்து சோழ நாட்டுக்குத் திரும்பினோம்.

"மீண்டும் நான் பழையாறைக்கு வந்து சேர்வதற்குள் இரண்டு வருஷத்துக்கு மேலாகிவிட்டது. மதுரைப் பக்கத்திலிருந்து வந்திருந்த அர்ச்சகர் பெண்ணை நான் அடியோடு மறந்து விட்டேன். பழையாறைக்கு வந்து பார்த்தபோது என் சகோதரியும் அப்பெண்ணும் அடையாளம் அறிய முடியாதபடி வளர்ந்திருக்கக் கண்டேன். அவர்களிருவரும் மிக்க சிநேகத்துடன் பழகுவதையும் கண்டேன். நந்தினி வளர்ந்திருந்தது மட்டுமல்ல, ஆடை ஆபரணங்களினாலும் ஜொலித்துக் கொண்டிருந்தாள். இது என் சகோதரியின் காரியம் என்று அறிந்தேன். முன் போலில்லாமல் நந்தினி இப்போது என்னைப் பார்க்கவும் பேசவும் கூச்சப்பட்டாள். அதை நான் போக்குவதற்குப் பாடுபட்டேன். வேறு எதிலும் காணாத இன்பம் அவளுடன் பேசிப் பழகுவதில் அடைந்தேன். இது எனக்கு அந்தச் சிறிய பிராயத்தில் எவ்வளவு வியப்பை அளித்தது என்பதைச் சொல்ல முடியாது. காவேரியில் பெருகி வரும் புது வெள்ளத்தைப் போல் என் உள்ளத்தில் ஏதோ ஒரு புதுமை உணர்ச்சி பொங்கி, வெள்ளமாய்ப் பெருகிக் கொண்டிருந்தது. ஆனால் இது என்னைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் பிடிக்கவில்லையென்பதை விரைவிலேயே கண்டு கொண்டேன். நான் வந்ததிலிருந்து குந்தவை அப்பெண்ணிடம் வெறுப்பைக் காட்டத் தொடங்கினாள். ஒரு நாள் எங்கள் பாட்டியார் மாதேவடிகள் என்னை அழைத்து, 'நந்தினி அர்ச்சகர் வீட்டுப் பெண் நீயோ சக்கரவர்த்தி குமாரன் உங்கள் இரண்டு பேருக்கும் இப்போது பிராயமும் ஆகிவிட்டது. ஆகையால் நந்தினியிடம் நீ பழகுவது உசிதமல்ல' என்று புத்திமதி கூறினார். அது வரை பாட்டியைத் தெய்வமென மதித்து வந்த நான் அப்போது அவரிடம் கோபமும் அவருடைய வார்த்தையில் அவமதிப்பும் கொண்டேன். அவருடைய புத்திமதியை மீறி நந்தினியைத் தேடிப் பிடித்துப் பேசிப் பழகினேன். இது நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. திடீரென்று ஒருநாள் நந்தினியும், அவளுடைய பெற்றோர்களும் பாண்டிய நாட்டில் அவர்களுடைய ஊருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள் என்று தெரிந்தது. அப்போது எனக்குத் துக்கம் பொங்கி வந்தது. கோபம் என்னை மீறி வந்தது. துக்கத்தை என் மனதிற்குள் வைத்துக் கொண்டு கோபத்தை என் சகோதரியின் பேரில் காட்டினேன். நல்லவேளையாகச் சில நாளைக்கெல்லாம் நான் வடக்கே பிரயாணப்பட நேர்ந்தது. திருமுனைப் பாடியையும் தொண்டை மண்டலத்தையும் ஆக்கிரமித்திருந்த இராஷ்டிரகூடப் படைகளை விரட்டுவதற்காகப் புறப்பட்ட சோழ சைன்யத்துடன் நானும் புறப்பட்டு வந்தேன். அப்போதுதான் நீயும் நானும் சந்தித்தோம் இணைபிரியா சிநேகிதர்களானோம்.

"மலையமான் அரசருடைய உதவியுடன் நீயும் நானும் இராஷ்டிரகூடப் படைகளுடன் போரிட்டோம். பாலாற்றுக்கு வடக்கே அவர்களைத் துரத்தி அடித்துக் காஞ்சி நகரையும் கைப்பற்றினோம். அச்சமயத்தில் இலங்கையிலிருந்து கெட்ட செய்தி வந்தது. நமது படை அங்கே முறியடிக்கப்பட்டதென்றும் கொடும்பாளூர் சிறிய வேளார் இறந்து விட்டார் என்றும் தெரிந்தன. இதைக் கேட்டுவிட்டு, அது வரையில் பாலைவனத்தின் மத்தியில் பாறைக் குகையில் ஒளிந்திருந்த வீரபாண்டியன், புற்றிலிருந்து பாம்பு புறப்படுவது போல் வெளிப் பட்டு வந்தான்.


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஜனநாயக காடு

ஒரு காட்டு பகுதியில் ஒரு முயல் வாழ்ந்து கிட்டு வந்துச்சு சுறு சுறுப்பான அந்த முயல் ஒருநாள் காட்டு வழியா நடந்து போய் கிட்டு இருந்துச்சு அங்க எல்லா மிருகங்களும் உக்காந்து பேசி கிட்டு இருந்துச்சுங்க.



அப்பத்தான் அந்த முயலுக்கு புரிஞ்சது புது அரசர தேர்ந்தெடுக்க இந்த மிருகங்கள் எல்லாம் முடிவு பண்ணிருக்குங்கனு ஆனா யார காட்டோட அரசரா தேர்ந்தெடுக் குறதுனு அவுங்களால முடிவு எடுக்க முடியல உடனே சிங்கம் சொல்லுச்சு நாளைக்கு ஒரு போட்டி வைப்போம், எல்லாரும் தங்ககிட்ட இருக்குற உயர்ந்த பொருளை கொண்டு வாங்க யாரு கிட்ட இருக்குற பொருள் ரொம்ப உயர்ந்ததுனு பார்த்து அவுங்களையே அரசா அறிவிக்கலாம்னு சொல்லுது. வீட்டுக்கு வந்த முயலுக்கு அவுங்க தாத்தா வைத்தியத்துக்கு பயன்படுத்துற மயக்க மருந்து கண்ணுல பட்டுச்சு அடடா வலி இல்லாம இருக்க நம்ம தாத்தா கண்டு பிடிச்ச இந்த மயக்க மருந்துதான் சிறந்ததுனு.

அந்த பாட்டில எடுத்துட்டு போட்டிக்கு போச்சு அந்த முயல் எல்லா மிருகங்களும் தங்களுக்கு உயர்ந்த பொருட்களை கொண்டு வந்திருந்தாங்க அப்ப திடீர்னு நிறைய வேட்டைக்காரங்க அங்க வந்தாங்க, இத பார்த்த முயல், நண்பர்களே நாம இப்ப இங்க இருந்து தப்பிக்கிறது கஷ்டம் எப்படி முயற்சி செஞ்சாலும் யாரவது மாட்டிக்குவோம் அதனால் இந்த மயக்க மருந்தை குடிச்சிட்டு எல்லாரும் படுத்துடுங்க, செத்த மிருகங்களை வேட்டைக் காரங்க பார்த்தா குழப்பமாகி திரும்பி போறதுக்கு வாய்ப்பிருக்குனு சொல்லுச்சு உடனே எல்லா மிருகங்களும் அந்த மருந்தை குடிசசிட்டு மயக்கம் போட்டு விழுந்திருச்சுங்க.

இத பார்த்த வேட்டைக்காரங்க இந்த இருக்குற மிருகங்களுக்கு எல்லாம் ஏதோ பெரிய நோய் வந்திருச்சு போல அதனால் எல்லாம் செத்துப் போச்சுங்க,இத எடுத்துட்டு போனா கூட நமக்கு உபயோகம் கிடையாதுன்னு சொல்லிட்டு திரும்பி போய்ட்டாங்க மயக்கம் தெளிஞ்சு எந்திரிச்ச எல்லாரும் முயலயே அரசரா அறிவிச்சாங்க ஆனா கொஞ்ச நாளுக்கு அப்புறம் தான் இந்த அரசர் பதவிக்கு தகுதி இல்லைங்கிறத எல்லாருக்கும் சொல்லுச்சு முயல் உடனே எல்லாரையும் கூப்பிட்டு இனிமே இந்த காடு ஜனநாயக காடு,இங்க இருக்குற ஒவ்வொருத்தரும் அரசரோட செயல்பாடுகளை பிரிச்சி தனியா செய்யணும்னு சொல்லுச்சு உடனே சிங்கம், புலியானை மாதிரி மிருகங்கள் காட்ட பாதுகாக்கவும், மாடு ஆடு, நரி போன்ற விலங் குகள் விவசாயமும், மத்த பறவைகள் காட்ட சுத்த படுத்தவும் ஆரம்பிச்சதுங்க அதுக்கப்புறம் அந்த ஜனநாயக காட்டுல அரசர் தேவைப்படவே இல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க்கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். ~ பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆங்கில மொழி விருத்திக்கு இந்தியத் தூதரகம் உதவ வேண்டும்

காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமென யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியபடி கப்பல் சேவை இடம்பெறுமாயின், அது தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

எனினும் இப்போதைக்கு மேற்குறிப்பிட்ட கப்பல் சேவை சாத்தியமில்லை என்றும் காங்கேசன்துறை கடல் துறைமுகம் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதுஎவ்வாறாயினும் இந்தியா நினைத்தால் காங்கேசன்துறை – நாகபட்டினத்துக்கான கப்பல் சேவையை விரைவாக ஆரம்பிக்க முடியும் என்பதுமட்டும் நிறுதிட்டமான உண்மை.

இஃது ஒருபுறமிருக்க பலாலிக்கும் சென்னைக்குமான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக ஈழத் தமிழ் மக்கள் சுலபமாக தமிழகத்துக்குச் சென்று வருகின்றனர்.

இந்த சேவை இன்னும் விஸ்தரிக்கப்படும் போது அதனால் நம் தமிழ் மக்கள் மிகுந்த நன்மையடைவர்.

இதேபோல இந்திய மத்திய அரசு யாழ்ப்பாண மக்களுக்காக அமைத்துக் கொடுத்த கலாசார மத்திய நிலையம் மற்றும் மன்னாரில் உள்ள பாடல் பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீச்சரத்தின் புனரமைப்பு என இந்திய மத்திய அரசின் உதவிகள் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தி வருகின்றன.

இவ்வாறு இந்திய மத்திய அரசின் உதவித் திட்டங்கள் வட பகுதிக்குக் கிடைப்பதற்கு யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் அமையப் பெற்றதே மூலகாரணம் எனலாம்.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் அமையப் பெற்ற இந்தியத் துணைத் தூதரகம் வடக்கு கிழக்கு மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் தன்னால் முடிந்த உதவிகளை வழங்குமாயின், அஃது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நகரப் பகுதிகள் தவிர, கிராம மட்டத்தில் மாணவர்களின் கல்வி என்பது போதுமானதாக இல்லை.

அதிலும் அதிகஷ்டப் பிரதேசங்களில் வாழுகின்ற மாணவர்களின் கல்வி தொடர்பில் எவருமே கரிசனை கொள்ளாத நிலைமையே இங்கு உள்ளது.

இதனால் அந்த மாணவர்கள் சமகால சூழலுக்கு ஏற்றதான கல்வியைக் கற்க முடியாதவர்களாக உள்ளனர்.

அதிலும் குறிப்பாக கிராமத்து மாணவர்களின் ஆங்கிலக் கல்வி என்பது இன்னமும் அடி மட்டத்தில் இருப்பது வேதனைக்குரியது.

எனவே கிராமத்து மாணவர்களின் ஆங்கிலக் கல்விக்கு உதவுகின்ற வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் உதவி செய்ய வேண்டும்.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து அவர்கள் கிராமத்து மாணவர்களுக்கு ஆங்கிலத்தைப் போதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமாயின், அது அந்த மாணவர்களுக்குத மிகப்பெரும் கொடையாக அமையும்.

ஆகையால் இது விடயத்தில் யாழ்ப்பாணத்து இந்திய துணைத் தூதரகம் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# இலங்கையில் அழிக்கப்பட்ட இனவாதத்தை ஜனாதிபதி ரணில் மீண்டும் தூண்டுகிறார்

## அத்துரலியே ரத்தன தேரர்

(கொழும்பு)

இலங்கையில் அழிக்கப்பட்ட இனவாதத்தை மீண்டும் தூண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக உத்தர லங்கா கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சியின் பின்னணியில் வெளிநாட்டு அதிகார சக்திகள் இருப்பதாக கூட்டணியின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலியே ரத்தன தேரர் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தனித்து தாம் மாத்திரமே வேட்பாளராக களமிறங்க வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

சிறிய அரசியல் கட்சிகளை தமக்கு சாதகமாக்கிக் கொள்வதன் மூலம் எதிர்க்கட்சி தலைவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து அகற்றலாம் என அவர் நினைக்கிறார்.

மக்கள் ஆணையின்றி ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றத்தின் ஆதரவின்றி ஒருவரும் ஜனாதிபதியாக முடியாது.

இதனடிப்படையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவருக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக்கிறது.

இலங்கை இராணுவத்தினரின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க தற்போது தந்திரமாக செயல்படுகிறார். அவரது இந்த நடவடிக்கைகளின் பின்னணியில் இருக்கும் ஒரே விடயம் ஜனாதிபதி தேர்தல்.

வடக்கு மற்றும் கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரவில்லை. தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டார். அவரது சுயநலத்துக்காக அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

தற்போது, அவர் மீண்டும் இலங்கையில் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கிறார். இலங்கையில் தற்போது இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் அவர் காணிகளை மக்களுக்கு பிரித்து கொடுத்தால் அதில் எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை.

எனினும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு குறித்த இடங்களை வழங்காது புலம்பெயர் தமிழர்களுக்கு அவற்றை கொடுக்கிறார். இதன் மூலம் அவர் இலங்கைக்கு துரோகம் செய்கிறார் என்பதே உண்மை என்றார். (ம-7)

# சந்தை வியாபாரி மீது தாக்குதல்

வியாபாரம் முடித்து விடு திரும்பிக் கொண்டிருந்த சந்தை வியாபாரி ஒருவர் மீது போத்தல் குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8.00 மணியளவில் உதயதிர்காமம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வல்லிபுரம், புலோலியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெயசீலன் (வயது- 48) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

மந்திகை மரக்கறிச் சந்தையில் வியாபாரம் மேற்கொண்டு வரும் அவர் வியாபாரம் முடித்து வீடு திரும்பி கொண்டு இருந்தபோது இவர் மீது போத்தல் குத்து தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

# மீசாலையில் விபத்து

## இ.போ.ச. சாரதி படுகாயம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலைச் சந்திப் பகுதியில் ஏ9 வீதியில் வியாழக்கிழமை இரவு இரண்டு பேருந்துகள் நேர் எதிரே மோதிக் கொண்டதில் இ.போ.ச பேருந்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி வந்த இ.போ.ச பேருந்தும்-யாழில் இருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்ற சுற்றுலா பேருந்து ஒன்றும் மீசாலை சந்தி பகுதியில் நேருக்கு நேராக உரசியதில் இ.போ.ச பேருந்து கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் இ.போ.ச பேருந்து சாரதி மாத்திரம் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

# வெளிவிவகார அமைச்சர் ஈரானுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி 2023 ஆகஸ்ட் 04 முதல் ஆகஸ்ட் 07, 2023 வரை ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் ஈரான் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல் லாஹியனின் அழைப்பின் பேரில் இந்த உத்தியோகபூர்வ விஜயம் இடம்பெறும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த விஜயத்தின் போது, வெளியுறவு அமைச்சர் ஈரானிய ஜனாதிபதி டாக்டர் செயிட் இப்ராஹிம்ரைசியை மரியாதை நிமித்தம் சந்திக்கவும், ஈரான் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் பிற மூத்த அரசாங்க அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை ஈரானின் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் நிறுவனத்தில் அமைச்சர் உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

# மௌனத்தீவு நூல் வெளியீடு

வே.பரிபாலன் (வேலு பரி) அவர்கள் எழுதிய மௌனத்தீவு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வெளியீட்டுரையை HNB வங்கியின் பிராந்திய முகாமையாளர் மகேசன் தயாகரன் அவர்களும் நூலின் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலையின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் மற்றும் அவுஸ்ரேலிய விரிவுரையாளர் ஈழலிங்கம் ஆகியோர் ஆற்ற உள்ளனர் (ம-7)

# ஐஸ்வர்ய கலசபூஜை

ஏகத்துவ அமைப்பு நடாத்திடும் ஸ்ரீ பரம்ஜோதி பகவதி லக்ஷ்மி கடாக்ஷ ஐஸ்வர்ய கலச பூஜையானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது இதில் கலந்து கொள்ளும் அடியவர்கள் கலச பூஜைகள் செய்வதற்குரிய ஏற்பாட்டுடன்வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

33

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



பராக்கிரமபாகு தனது இளம் வயதை தனது மாமன்மாரான கீர்த்தி சிறீமேகன், ஸ்ரீவல்லப போன்றோரின் அரண்மனைகளில் கழித்தார். இவர்கள் முறையே தக்கிண தேசம் மற்றும் உருகுணை இராச்சியத்தின் மன்னர்கள். அத்துடன் இராசரட்டையின் இரண்டாம் கஜபாகு வுடனும் இளமையில் நட்புறவு வைத்துள்ளார். சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடனும் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

பர்மிய மன்னனான அலங்வுசிங் இலங்கை யிலிருந்து சென்ற வர்த்தகக் குழுவைத் துன்புறுத் தியமைக்காகவும் பர்மா ஊடாக கம்பூச்சியா விற்குப் பயணம் செய்த இலங்கை இளவரசியை சிறைப்பிடித்தமைக்காகவும் 1164 ஆம் ஆண்டு மன்னன் பர்மா மீதுபடையெடுத்தான். இப் படையெடுப்பை வெற்றிகரமாக முடித்த தளபதிக்கு கிராமங்களை மன்னன் பரிசளித்ததாக தெவ னகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.


1169 இல் பராக்கிரம பாண்டிய மன்னனின் ஆட்சியின் போது பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியன் என்பவன் படையெடுத்து பட்டத்து ராணியையும், பிள்ளைகளையும் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய வேளை பராக்கிரம பாண்டிய மன்னனிடம் உதவி கோரவே, லங்காபுர எனும் தளபதியின் கீழ் ஒருபடையை அனுப்பி வைத்தான். அவர்கள் குலசேகர பாண்டியனைத் தோற்கடித்து பராக்கிரம பாண்டி யனுக்கு ஆட்சியைப் பெற்றுக் கொடுத்த பின்னர் இராமேஸ்வரத்தில் பராக்கிரமபுரம் எனும் பெயரில் ஒரு கோட்டையை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது.

முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இலங் கையின் மன்னனாக வளர்ச்சி பெற்ற படி முறைகள் (1). தக்கிணதேசத்து அரசனாதல், (2). இராசரட்டையின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், (3). ருகுணு தேசத்தைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் (4). முழு இலங்கைக்கும் அரசனாதல்.

### பராக்கிரமபாகு I
### வெள்ளிநிக்கா நாணயம்

பொலன்னறுவை காலத்தின் மிகச் சிறந்த மன்னரான முதலாம் பராக்கிரமபாகு மன்னரின் அரிய வெள்ளி நிக்கா படத்தில் காட்டப்பட்டுள்ளது. நிக்கா என்பது அதன்பெறுமதி. இதன் விட்டம் 20மி.மீ ஆகும். தடிப்பு 3.0மி.மீ ஆகும்.

பராக்கிரமபாகு (1153-1186) - வெள்ளிநிக்கா
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் -உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் அவன்பெயரும்



**முதலாம்பராக்கிரமபாகுமன்னரின் (1153 - 1186) செப்புமோசாநாணயம்**

முதலாம்பராக்கிரமபாகுமன்னரின் (1153 - 1186) செப்புமோசா நாணயம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. மோசா என்பது அதன் பெறுமதி. இதன் விட்டம் 19.44 மி.மீ ஆகும்.


பராக்கிரமபாகு (1153-1186 ) - செப்புமோசா
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் -உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் அவன்பெயரும்



**முதலாம்பராக்கிரமபாகுமன்னரின் 1/8 செப்புமோசாநாணயம்**

முதலாம்பராக்கிரமபாகு மன்னரின் 1/8 செப்பு மோசா நாணயங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. ஒரு நாணயத்தின் விட்டம் 10 மி.மீ ஆகும். மற்றைய நாணயத்தின் விட்டம் 10.4 மி.மீ உம் தடிப்பு 1.3மி.மீஉம் ஆகும்.

பராக்கிரமபாகு (1153-1186) - 1/8 செப்புமோசா
முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசன்
பின்பக்கம் – நாகரி எழுத்தில் அரசனின் பெயர்



### இரண்டாம்விஜயபாகு
### (கி.பி. 1186 - 1187 ஆட்சிக்காலம்)

பண்டிதவிஜயபாகு (கி.பி. 1186 - 1187 ஆட்சிக் காலம்) எனப் பெயர் பெற்ற இரண்டாம் விஜயபாகு பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்தவன். பராக்கிரமபாகு மன்னனின் இறப்பைத் தொடர்ந்து, அவனது சகோதரியின் மைந்தனும் அறிவு மிக்க புலவ னுமான இரண்டாம் விஜயபாகு ஆட்சியில மர்ந்தான்.

கலிங்கமாகனின் படையெடுப்பின் பின்னர் புத்தரின் தந்ததாதுக்கள் மத்திய மலைநாட்டின் கொத்மலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டி ருந்தன. இவன் அவற்றை பெலிகலை மலையுச் சியில் ஒரு கட்டிடத்தில் பாதுகாப்பாக வைத்தான்.

இவன் தனது தாய் மாமனான மகாபராக்கிர மபாகுவினால் பர்மாவின் அலங்வுசிங் மன்னனுக் கெதிராகப் போர் தொடுக்கப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்குமிடையில் நிலவிய பகைமையை மாற்றி, நல்லுறவை ஏற்படுத்தினான்.

இரண்டாம் விஜயபாகு மன்னன் பர்மாவின் அரிமத்தானா மன்னனுக்கு மகத மொழியில், அதாவது பாளி மொழியில் ஒரு கடிதமெழுதியதாகக் கூறப்படுகிறது. இவன் ஏராளமான சிறைக் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தான். ஓராண்டு காலம் மட்டுமே ஆட்சியிலிருந்த இம் மன்னன் ஆறாம் மகிந்தன் என்பவனின் சதியினாற் கொல்லப்பட்டான்.

### ஆறாம்மகிந்தன் (1187)

ஆறாம் மகிந்தன் என்பவன் இரண்டாம் விஜயபாகு அரசனைக் கொன்றே அரசனானான். இவன் 5 நாட்கள் மட்டுமே அனுராதபுரத்தை ஆட்சி புரிந்தான். இவனைக் கொன்று இரண் டாம் விஜயபாகுவின் மகனான நிசங்கமல்லன் அரசைக் கைப்பற்றிக் கொண்டான்.

### கலிங்கவம்சம்
### நிசங்கமல்லன் (1187-1196)

நிசங்கமல்லன்அல்லது கீர்த்தி நிசங்கன் என்பவன் இலங்கையின் பொலநறுவையை ஆண்ட மன்னனாவான். இவன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன். இம் மன்னன் இலங்கையில் ஒரு புதிய அரச வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான். கலிங்க நாட்டின் சிங்கபுரத்தின் ஸ்ரீஜயகோப மன்னனினதும் பார்வதி தேவியினதும் மகனாகப் பிறந்தான்.

இவன் இலங்கையைகி.பி. 1187-1196 வரை 9 ஆண்டுகள் ஆண்டான். இவனது அரண்ம னையான நிசங்லதா மண்டபம், ஹத்ததாகே, ரன்கொத் விகாரைகள் மற்றும் வடிகாலமைப்புத் தொகுதிகள் போன்றவை இம் மன்னனது கட்டடக் கலை ஆக்கங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தம்புள்ள குகையில் நிசங்க மல்லனின் உருவச்சிலை உள்ளது.

அடிக்கடி குழப்பங்கள் ஏற்படுகின்ற ருகுணு இராச்சியத்திற்கு மன்னன் விஜயம் செய்தல், மன்னனுக்கு சார்பானவர்களின் தேவையை நிறைவு செய்தல், அவர்களின் நலன்புரி விடயங்களைக் கவனித்தல் என்பன மூலம் மக்களின் அரச விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டமை.

இம் மன்னன் ருகுணு, மாயா, பிஹிட்டி எனும் மூன்று பிரதேசங்களிலும் கல்வெட்டுக்களைப் பொறித்திருப்பதன் மூலம் முழு நாட்டையும் ஆட்சி செய்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. பௌத்தர் அல்லாத வேறு எவருக்கும் இலங்கை அரசுக்கோ சிம்மாசனத்துக்கோ உரிமை கோர முடியாது எனும் கருத்து மூலம் அரசின் சிங்கள, பௌத்த பாரம்பரியத்தை நிலை நாட்டியுள் ளான்.

ஒரு யுத்தத்தின் போது பாண்டிய நாட்டுக்குப் படையுதவி வழங்கிய சிங்களப் படையினர் பாண்டிய மன்னனை வெற்றியடையச் செய் ததுடன் இராமேஸ்வரத்தில் கோயில் ஒன்றை யும் அமைத்தான்.

கர்நாடகம், வங்கம், ஒரிசா, ஆந்திரா, குஜராத், பர்மா, கம்பூச்சியா முதலிய இராச்சியங்களுடன் நட்புறவுடன் செயற்பட்டதுடன் விஜயநகர், சாளுக்கிய, குஜராத் அரச குடும்பங்களுடன் திருமணத் தொடர்பும் வைத்திருந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 போதை...

ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட புத்தளத்தை சேர்ந்த 23 வயதான குறித்த சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டார். (ம-7,33,104)

## யாழ்.பல்கலை...

மரியலக்சிகா (வயது-21) என்ற யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முகாமைத் துவபீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த மாணவி யாழ்ப்பாணம் கலட் டிப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றின் அறையில் வாடகைக் குக் குடியிருந்துள்ளார்.

குறித்த மாணவி நேற்று காலை விரி வுரைகளுக்குச் செல்லாமல் தனித் திருந்ததாகவும், சக மாணவிகள் நண் பகல் அளவில் அறைக்குத் திரும்பி வந்த வேளையில் மாணவியின் சடலத் தைக் கண்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவம் தொடர்பில், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,33,60,104)

## அதிகளவான...

யில்,

மின்சார உபகரண விற்பனைக் காக குறித்த இளைஞன் யாழ்ப்பாணத் திற்கு வந்துள்ளார்.

இந்நிலையில் கல்வியங்காட்டில் அவர் நேற்றையதினம் உபகரணங் களை விற்பனை செய்துகொண்டிருந்த வேளை மயங்கி விழுந்துள்ளார்.

இதன்போது அவருடன் சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞன் அவரை விடுதிக்கு அழைத்துச் சென்ற பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டவேளை நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மீதான மரண விசா ரணையை திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேமகுமார் மேற் கொண்டார். அவர் ஹெரோயினை பாவித்துவிட்டு வியாபாரத்தில் ஈடுபட் டுள்ளார். அத்துடன் அதிக ஹெரோ யினை பாவித்தமையால் குறித்த மர ணம் நிகழ்ந்துள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ம-7,33,60,104)

## மல்லாவியில்...

முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு குளத்தில் விடப்பட்டவை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ம-7)

## உணவுப்...

வேண்டும் எனவும் அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் நீர்க்கட்டண அதிகரிப்பு தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தத்தின் மூலம் உள்நாட்டு பாவனையாளர்களின் நீர் கட்டணம் 106 வீதத்தால் அதிகரிக்கப் படும் என தேசிய நீர் வழங்கல் சபை யின் வர்த்தகப் பிரிவின் பிரதி இணைப் பணிப்பாளர் பியல் பத்மநாத கொழும் பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்தநிலையில், நீர்க்கட்டண அதி கரிப்பு தொடர்பில் உணவகங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கப்பட வேண்டு மென உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கிளாலி...

மடைந்த நிலையில் சாவகச்சேரி வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (ம-7,30,33)

## கீரிமலை...

ழர்களின் பழைமையான கீரிமலை தீர்த்தக்கேணி அமைந்துள்ளது.

குறித்த தீர்த்தக்கேணி தொல்லியல் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது.

கீரிமலை புனித தீர்த்தக்கேணி தொல்லியல் சின்னமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் கீரிமலை முழுமையான இடமும் தொல்லியல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட லாம் என தமிழ் மக்கள் இடையே அச்சநிலை தோன்றியுள்ளது.

இதேவேளை யாழ் - சுழிபுரம் பறா ளாய் முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டு பழைமைவாய்ந்த அரச மரம் சங்கமித்தையுடன் தொடர்புடைய அரச மரம் என வர்த்தமானி அறிவித் தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால், முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற் பட்டுள்ளது.

குறித்த அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அரச மரத்தை தொல் பொருள் திணைக்களத்தினர் ஆக்கிர மித்து, புத்தர் சிலைகளை நிறுவி, முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப் பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி பிக்குகள் சிலர் ஆலயத்திற்கு வந்து சென்ற நிலையில், ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்பு காட்டி இருந்தனர்.

அதற்கு ஆலய பக்தர்கள் மற்றும் ஊரவர் கள் எதிர்ப்பு காட் டியதால், பிக்கு கள் அங்கிருந்து வெளியேறி இருந் தனர்.

இந்நிலையி லேயே தற்போது குறித்த வர்த்த மானி அறிவித் தல் வெளியிடப் பட்டுள்ளது.(ம-7)

## மின்...

யில், மீண்டும் கட் டண அதிகரிப் பிற்கான அனு மதி கோரப்பட் டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது தொடர் மின் சார விநியோகத்திற் கான திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் வலி யுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊட கப் பிரிவு நேற்று முன்தினம் அறி வித்தது.

மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய கப்பல் ஊடாக மின்சா ரத்தை பெற்றுக் கொள்ளும் விட யத்தை துரிதப் படுத்தினால், மின்சார நெருக் கடிக்கு தீர்வுகாண

முடியும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது. (ம-7)

## ரஜமஹா விகாரையின் மின்சாரம் துண்டிப்பு

(கொழும்பு)

மிஹிந்தலை ரஜமஹா விகாரை யில் 41 இலட்சம் ரூபாய் மின்சாரக் கட் டணம் செலுத்தப்படாமையால் விகா ரையின் மின்சாரம் நேற்று துண் டிக்கப் பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பௌத்த மதத்தை ஸ்தாபித்த மையமாகவும், ஸ்ரீ மஹா போ சமிதுன் வரலாற்று புனித இடமாக வும் விளங்கிய மிஹிந்தலை புனித பூமி யில் நேற்று மின்சாரம் துண்டிக்கப்பட்ட தாக மிஹிந்தலை ரஜமஹா விகாரை யின் தலைவர் வளவ ஹங்குனவேவே தம்மரத்ன தேரர் தெரிவித்தார். (ம-7)


## விற்பனை உதவியாளர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கற்றுக்களை விற்பனை செய்வதற்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. லொத்தர் கூடுகளுக்கும் சைக்கிளில் விற்பனை செய்வதற்கும் நடந்து விற்பனை செய்வதற்கும் 35 வயதிற்கு மேற்பட்ட விற்பனை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 603 1723, 077 162 9385

(16599)


### மெகா பவர்

திகதி 03/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1543
C 16 14 30 49 75
Double Chance 71376

### தன நிதானய

திகதி - 2023.08.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1225
F 20 49 60 67 F
Double Chance 03278

### Lucky 7 லக்கி

திகதி 03.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0021
L7 இலக்கம் 2 5
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 8 1 2 3 2 2

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3437
சீட்டிழுப்பு திகதி 03.08.2023
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 04 06 60 75
V
09168
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.03
சீட்டிழுப்பு இலக்கம் 504
மிதுனம் 31 45 60 62 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/08/03
சீட்டிழுப்பு இலக்கம் 5195
E 2 6 1 5 4 8
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2169 | வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.03 | தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 21 70 72 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,906,020.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 46 59 62 65 C

### சனிதா

திகதி 2023.08.03 | வெற்றி வாரம் 4330 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 11 39 53 58 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,089,132.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 32 42 46 59 M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் 3881 | வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.03 | தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 25 40 44 | கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,232,704/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 19 46 47 57 | துலாம்

### கப்ருக

திகதி 2023.08.03 | வெற்றி வாரம் 1345 | வர்ணம் ஆரஞ்சு
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 25 20 40 57 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 424,012,314.20
கப்ருக "இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 05 13 14 41 P
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 616 | திகதி 2023-08-03 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 27 40 70 | விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 22,496,808.00
DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### ADA KOTIPATHI

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1995
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.08.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,076,680/-
வெற்றி இலக்கங்கள் 23 26 35 64 S
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 42 44 54 62 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

எமது உற்பத்தி, விநியோக நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணி நிலைகளிற்கு பணியாளர்கள் தேவை.

I. கணக்காளர் (ஆண்/பெண்)
II. கணக்குப் பதிவாளர் (பெண்கள் மட்டும்)
III. விற்பனைப் பிரதிநிதி
IV. வாகனச் சாரதி
V. மில் தொழிலாளர்

- மேற்படி பணி நிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- விண்ணப்பங்களை கீழ்காணும் முகவரிக்கு 10.08.2023 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நட்னாஸ்(பிறைவட்) லிமிட்டட்
சன்னதி றோட், (சதோச விற்பனை நிலையம் முன்பாக) அச்சுவேலி.

(16598)

உடன் தொடர்புகளுக்கு - 021 222 6554



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127



## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-
ஜெயம்
077 814 7389
077 986 5457

(16409)



## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7003)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



## Happy Supermarket
உரும்பிராய்



அங்கர் யோக்கட் மொத்த சில்லறை கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

~~80/=~~ 50/= புதிய கையிருப்புக்கள்

(16411)

077 121 5548



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P: 077 544 8503



## WORK IN UK

WORK PERMITS

CONSTRUCTION WORKERS

- 5 YEAR WORK PERMITS
- குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES

போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்



CIMS COLLEGE 0777-068-777

(C-7008)



## KILI PEOPLE

ksf
Kilipeople Sports Festival

## கிளிபீப்பிளின் விளையாட்டுத் திருவிழா - 2023

## KILIPEOPLE SPORTS FESTIVAL

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் ஆதரவுடன் நடைபெறும் மாபெரும் விளையாட்டுத் திருவிழா.

இம் மாதம் 5ம், 6ம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளும் நிறைவுநாளான 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சம்பிரதாய பூர்வ நிறைவு நிகழ்வும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெற இருக்கிறது.

விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.



**Football**
August 4,5& 6
Place - Rodrico



**Tug of War**
August 5 & 6
Place - Kn/Central College

**Kabadi**
August 5 & 6
Place - Indoor Stadium Killinochchi



**Table Tennis**
August 5 & 6
Place - District SP Unit



(C-7000)

contact :
077 134 3832
killipeople2011@gmail.com

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு (கிளிபீப்பிள்)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org